



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 210 23.1.2026 FRIDAY THAI : 9 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 210 23.1.2026 வெள்ளிக்கிழமை தை : 9 விலை : ரூ.5/-


## தமிழின எதிரியான

# “பாஜக கூட்டணியை வீழ்த்த உறுதியேற்போம்”



## ஆத்தூர் தொகுதியில் த.வெ.க. சார்பாக ஒட்டப்பட்ட ஒரு வால்போஸ்டர் வாசகத்தால் த.வெ.க. கூடாரம் காலி

### கூட்டம் கூட்டமாய் திமுகவில் இணையும் த.வெ.க. தொண்டர்கள்

சின்னாளபட்டி, ஜன22

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் முடிசூடா மன்னராக வலம்வருபவர் தென்பாண்டி சிங்கம் என தொகுதி மக்களால் செல்லமாக அழைக்கப் படும் ஐ.பெரியசாமி அவர்கள். 37 வருடங்களாக தொகுதி மக்களோடு மக்களாக பழகி வரும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்துச் செல்வதோடு, அனைத்து கட்;சி நிர்வாகிகளும் பாராட்டும் அளவிற்கு தொகுதியில் நலத்திட்டங்களை ஜாதி, மத, இன வேறுபாடின்றி செயல்படுத்தி வருகிறார். இந்நிலையில் புதிதாக தொடங்கப்பட்ட கட்சியான த.வெ.க. கட்சி சார்பாக அக்கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் தாங்கள்தான் அடுத்து ஆட்சி அமைக்கப் போகிறோம் என்ற கனவில் திமுகவிற்கும், ஆத்தூர் தொகுதி திமுக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும் சவால் விடும் வகையில் வால்போஸ்டர்களை ஒட்டினார்கள். இதை அமைச்சர் பெரியசாமி அவர்கள் கண்டுகொள்ளவில்லை. மேலும் கட்சி நிர்வாகிகள் இது குறித்து எதுவும் செய்ய வேண்டாம் என கூறி அமைதி காக்க சொன்னார். ஆனால், த.வெ.க நிர்வாகிகள் மீண்டும், மீண்டும் பொழுதுபோக்கிற்கு ஒட்டுவது போல் வால்போஸ்டர்களை ஒட்டி வந்தனர். இதனால் தற்போது த.வெ.க. கட்சி தொண்டர்களே அதிருப்தி அடைந்து திமுகவில் இணையத் தொடங்கிவிட்டனர். பிள்ளையார்சுழியாக சின்னாளபட்டி மேட்டுப்பட்டியில் தொடங்கி சித்தையங்கோட்டை, சித்தரேவு, சேடபட்டி, அக்கரைப்பட்டி, தருமத்துப்பட்டி உட்பட பல கிராமங்களிலிருந்த த.வெ.க. கட்சி தொண்டர்கள், நிர்வாகிகள் கொத்து கொத்தாய் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை சந்தித்து சால்வை அணிவித்து திமுகவில் இணைந்து வருகின்றனர். இது குறித்து த.வெ.க. தொண்டர்களிடம் கேட்டபோது தமிழ்நாட்டிலேயே ஒரு ரூபாய்கூட வாங்காமல் அரசு வேலை வழங்கக் கூடிய அமைச்சராக தமிழ்நாட்டிழிலுயே ஆத்தூர் தொகுதியைச் சேர்ந்த நமது அமைச்சர் (ஐ.பெரியசாமி) உள்ளார். இது தவிர எல்லோரையும் சமமாக நினைத்து அரவணைத்து செல்கிறார். இவரைத் தவிர வேறு யார் தொகுதி மக்களுக்கு நல்லது செய்ய முடியும். அதனால்தான் நாங்கள் த.வெ.க கட்சியிலிருந்து விலகி திமுகவில் இணைந்து வருகிறோம் என்றதோடு இனியும் கிராமங்களில் உள்ள த.வெ.க. தொண்டர்கள், நிர்வாகிகள் திமுகவில் அதிக அளவில் இணைவார்கள் என்றனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், ஆம்பூர் பெரியாங்குப்பம் பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி சந்தோஷ் என்பவர் மாற்றுத்திறனாளிகளுக்கான எகிப்து சர்வதேச பாரா பேட்மிட்டன் போட்டியில் வீல் சேர் பிரிவில் கலந்துகொண்டு ஆடவர் ஒற்றையர் பிரிவில் வெண்கல பதக்கமும், இரட்டையர் பிரிவில் வெள்ளி பதக்கமும் வென்றுள்ளதை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி அவர்களிடம் இன்று காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஜெயகுமாரி உள்ளார்.

## திமுகவினருக்கு ஸ்டாலின் அழைப்பு

சென்னை: ஜன.23-

“ஜனவரி 25 அன்று மாநிலம் முழுவதும் நடைபெறவுள்ள மொழிப் போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று, தமிழ் இன மொழி எதிரிகளான பாஜகவையும் அதன் அடிமைக் கூட்டணியையும் வீழ்த்திட உறுதியேற்க வேண்டும்” என முதல்வர் ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

இது குறித்து திமுக தொண்டர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள மடலில், “மொழியும் இனமும் கழகத்தின் இரு கண்கள். அவற்றின் உரிமைகளைக் காப்பதற்காக உருவானதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். மொழிக்காக உயிரையே மாய்த்துக் கொண்ட தீரமிக்க தொண்டர்களின் கோட்டம் இது.

இப்போதும் அதிகார மனப்பான்மையுடன் ஒன்றிய அரசு இந்தியைத் திணிக்கும் வேலையைத் தொடர்ந்து செய்கிறது. அண்ணா வகுத்துத் தந்த இருமொழிக் கொள்கைக்கு மாற்றாக, இந்தியைத் திணிக்கும் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் கல்விக்கான நிதியைத் தருவோம் என்று தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது.

தமிழ்மொழியின் மீது இந்தி ஆதிக்கத்தையும், தமிழர்களின் பண்பாட்டின் மீது மதவெறிக் கலவரங்களையும் முன்னெடுத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தடைக்கற்களையும் ஒன்றிய பாஜக அரசு தொடர்ந்து போட்டு வருகிறது.

எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றைத் தகர்த்தெறியும் தடந்தோள்கள் எங்களுக்கு உண்டு என்ற உறுதியுடன், உங்களில் ஒருவனான என் தலைமையிலான அரசும், எனக்கு உறுதுணையாக நிற்கும் அன்பு உடன்பிறப்புகளான நீங்களும் எதிர்கொண்டு நிற்கிறோம்.

தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து செய்து வரும் வஞ்சகத்தைத் தட்டிக் கேட்கும் துணிச்சலும், நிமிர்ந்து நின்று எதிர்க்கும் முதுகெலும்பும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உண்டு. எதிர்க்கட்சியான அதிமுகவும் அதிலிருந்து உதிர்ந்த இலை தழை சருகுகளும் பழைய வழக்குகளின் கோப்புகள் தூசு தட்டப்படும் சத்தம் கேட்டதுமே, பயந்து நடுங்கி, டெல்லிக்கு ஓடி பாஜகவின் பாதம் பணிந்து நின்று விடுகின்றன.

ஒன்றிய பாஜக அரசின்



கைப்பாவைகளாகிவிட்ட அமலாக்கத் துறை, சிபிஐ, வருமானவரித் துறை இன்னும் உள்ள புலனாய்வு அமைப்புகளை வைத்துத் திமுகவினரையும் முடக்கிவிடலாம் என்கிற சதித்திட்டம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. நாம் பணிய மாட்டோம். துணிந்து நிற்போம். இனம் மொழி நிலம் காத்திடும் போரைத் தொடர்ந்திடுவோம்.

பாசிசப் படையை எதிர்க்கும் சமூக நீதி ஜனநாயகப் படையாகத் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் களத்திற்கு ஆயத்தமாகி விட்டது. அதற்கான முரசு கொட்டும் நிகழ்ச்சியாக, ஜனவரி 20ஆம் நாள் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமைந்துள்ளன.

கழகத்தின் இளைஞர்களும் மகளிரும் இந்தத் தேர்தல் களத்தில் அணிவகுத்து ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து திட்டமிடப்பட்டுள்ளன. ஜனநாயகப் போர்க்களத்தின் முன்கள வீரர்களாக நியமிக்கப்பட்டுள்ள பாக முகவர்கள், வாக்குச்சாவடிக் குழு உறுப்பினர்கள் மற்றும் டிஜிட்டல் முகவர்கள் ஆகியோருக்கான பயிற்சிக் களமும் மண்டல வாரியாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைத் தலைகுனிய விடாமல், அனைத்து இலக்குகளிலும் மாநிலத்தை முன்னேற்றி வருகிற திராவிட மாடல் அரசின் சாதனைகளைத் தொகுதிகள் தோறும் முழங்குகின்ற பொதுக்கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. 2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறுகிற பல்வேறு நலத்திட்டங்களைக் கழக அரசு செயல்படுத்தியுள்ளது.

குறிப்பாக மகளிர் நலன் காக்கும் முன்னோடித் திட்டங்களை இந்தியாவின் பிற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறோம். இவற்றை மக்களிடம் வீடு வீடாகப் பரப்புரை செய்யும் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ என்ற தலைப்பிலான மகளிர் குழுவினரின் பயணம் ஒவ்வொரு பாகத்திலும் பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 8 வரை நடைபெறவுள்ளது.

‘தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்‘ எனத் தொகுதிகள் தோறும் நடைபெறவுள்ள பொதுக்கூட்டங்கள் பிப்ரவரி 28 வரை நடைபெறவுள்ளன. அத்துடன், ஜனவரி 26 அன்று டெல்டா மண்டல வெல்லும் தமிழ்ப் பெண்கள் மகளிர் மாநாடு எழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது.

பிப்ரவரி 7ஆம் நாள் விருதுநகரில் நடைபெறும் தென் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பில் கழக இளைஞர்கள் அணிவகுக்க ஆயத்தமாகிவிட்டனர். மகளிர் படையையும், இளைஞர் பட்டாளத்தையும் உற்சாகப்படுத்தி உத்வேகமளித்திடும் வகையில் உங்களில் ஒருவனான நான் அந்த இரு நிகழ்வுகளிலும் பங்கேற்கிறேன்.

வீடு வீடாகப் பரப்புரை, தொகுதிகள் தோறும் பொதுக்கூட்ட முழக்கங்கள், களத்தில் நிற்கும் கழகத்தினருக்குப் பயிற்சிக் கூட்டங்கள் என பிப்ரவரி மாதம் முழுவதும் தேர்தல் களத்திற்கான முன்னோட்டப் பயணத்தைக் கழகம் மேற்கொள்ளும் நிலையில், அதன் முத்தாய்ப்பாகத் தீரர் கோட்டமாம் திருச்சியில் மார்ச் 8 அன்று, பத்து லட்சம் உடன்பிறப்புகள் கூடுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாடு பேரெழுச்சியுடன் நடைபெறவிருக்கிறது.

இப்படியொரு கொள்கைப் பட்டாளம் இந்தியாவில் எந்த இயக்கத்திலும் கிடையாது என்பதை உரக்கச் சொல்லிடும் வகையில், உடன்பிறப்புகளின் திருச்சி வருகையை உங்களில் ஒருவனான நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ஜனநாயகப் போர்க்கள வீரர்களான உடன்பிறப்புகளுக்கு ஓய்வில்லை. உங்களை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள உங்களில் ஒருவனான எனக்கு ஓய்வுமில்லை உறக்கமுமில்லை.

நம் உடன்பிறப்புகள் தேர்தலுக்கான கட்சி அரசியல் வேலைகளை மட்டும் செய்யவில்லை. ஒவ்வொரு குடிமக்களின் ஜனநாயக ஆயுதமான வாக்குரிமையைப் பாதுகாக்கும் பணியையும் களத்தில் நின்று நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

கலைஞர் அடிக்கடி சொன்னதுபோல, நாம் எதிர்கொள்கின்ற 2026 தேர்தல் களம் ஆரிய திராவிடப் போரின் மற்றொரு களம். அந்தக் களத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் சமூக நீதி மதநல்லிணக்கம் மாநில உரிமைகளை லட்சியமாகக் கொண்ட கொள்கைக் கூட்டணி வலிமையுடன் களத்தில் நிற்கிறது. தமிழ்ப் பண்பாட்டை அழிக்க நினைக்கும் அரசியல் எதிரிகளையும், அந்த எதிரிகளின் கூலிப்பட்டாளமாகிவிட்ட அடிமைகளையும் எதிர்கொண்டு வெற்றியை உறுதி செய்யும் களம்.

போர்க்களம் காணும் படை வீரர்கள் தங்களின் நாட்டைக் காத்திட உறுதியேற்பது வழக்கம். ஜனநாயகக் களம் காணும் கழகத்தின் லட்சிய வீரர்களான உடன்பிறப்புகள், ஜனவரி 25 அன்று மாநிலம் முழுவதும் நடைபெறவுள்ள மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டங்களில் பங்கேற்று, தமிழ் இன மொழி எதிரிகளான பா.ஜ.க.வையும், அதன் அடிமைக் கூட்டணியையும் வீழ்த்திட உறுதியேற்க வேண்டும்.

உங்களில் ஒருவனான நான், தமிழ்மொழி காத்திடும் அறப்போரில் தங்கள் இன்னுயிரை ஈந்த தியாகிகளாம் தாளமுத்து நடராசன் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தி உறுதியேற்க இருக்கிறேன். அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தில் நடைபெறும் வீரவணக்க நாள் கூட்டத்தில் உரையாற்றுகிறேன்.

வீரவணக்கத்துடன் தொடங்கும் கழக உடன்பிறப்புகளின் அணிவகுப்பும் களப்பணியும் 2026 சட்டமன்றத் தேர்தல் நிறைவு பெறும் வரை ஓய்வின்றிச் செல்லட்டும். தொய்வின்றித் தொடரட்டும். மகத்தான வெற்றியுடன் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையட்டும்” என்று ஸ்டாலின் கூறியுள்ளார்.







# "பிரிவினையைத் தூண்டும் உதயநிதியை பதவியிலிருந்து நீக்க வேண்டும்" பியூஷ் கோயல்



சென்னை, ஜன.23-

"உதயநிதி ஸ்டாலினின் தேசத்துக்கு எதிரான வெறுப்பு பேச்சை உயர் நீதிமன்றம் கண்டித்துள்ளது. எனவே பிரிவினையைத் தூண்டும் உதயநிதி ஸ்டாலினை பதவியிலிருந்து முதல்வர் ஸ்டாலின் நீக்க வேண்டும்" என பாஜகவின் தமிழக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

பிரதமர் மோடி நாளை சென்னை வரவுள்ள நிலையில், இன்று தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்தார். சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள பழனிசாமியின் இல்லத்தில் பியூஷ் கோயல் காலை உணவு அருந்தினார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த பியூஷ் கோயல், ' ஊழல் நிறைந்த திமுக ஆட்சியை வீட்டுக்கு அனுப்பி தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வரும். திமுக ஆட்சியில் ஊழலை தவிர வேறு எதுவும் நடக்கவில்லை என அனைத்து தரப்பு மக்களும் புரிந்து கொண்டனர். வளர்ச்சிக்கு எதிரான திமுக அரசு மக்கள் நலனுக்காக எதையும் செய்யவில்லை. திமுகவின் குடும்ப ஆட்சியில் விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்

உதயநிதி ஸ்டாலினின் தேசத்துக்கு எதிரான வெறுப்பு பேச்சை உயர் நீதிமன்றம் நேற்று கண்டித்தது. எனவே உதயநிதி ஸ்டாலினை பதவியிலிருந்து முதல்வர் ஸ்டாலின் நீக்க வேண்டும். உதயநிதியின் பேச்சு தமிழகத்தில் பிரிவினையை தூண்டி, சமூகங்களுக்கு இடையே பிளவை உருவாக்கும் வகையில் உள்ளது.

நாளை பிரதமர் தமிழகத்துக்கு வருகை தருகிறார். மேலும், மிகப்பெரிய பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்கிறார். இக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் உட்பட தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

2026ல் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும்போது தமிழகம் மிகப்பெரிய வளர்ச்சியை அடையும். தமிழ் கலாச்சாரம், தமிழின் பெருமை ஆகியவற்றை நிலைநிறுத்தி, தமிழகத்தை நம்பர் ஒன் மாநிலமாக மாற்றுவோம்" என்றார்.

# "திமுக அரசு சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்கிறது" விவரங்களை அடுக்கி இபிஎஸ் கண்டனம்



சென்னை, ஜன.23-

"கறிக்கோழி விவகாரம் குறித்து பேச சட்டப்பேரவையில் அனுமதிக்கவில்லை, திமுக அரசு சர்வாதிகாரப் போக்குடன் நடந்து கொள்கிறது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கறிக்கோழி விவகாரம் தொடர்பாக அதிமுக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தது. பின்னர் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க வலியுறுத்தி சட்டப்பேரவையில் அதிமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

ஆனால் முதல்வர் ஸ்டாலின், "கறிக்கோழி விவகாரம் குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் அமைச்சர்களிடம் கலந்தாலோசித்த பிறகு, இது குறித்து நாளை விவாதிக்கலாம்" என்றார். இதனை ஏற்காத அதிமுகவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு, வெளிநடப்பு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களிடம் பேசும்போது, "மூலப்பொருட்கள் விலை உயர்வால் கறிக்கோழி பண்ணையில் பணிபுரியும் 5 லட்சம் தொழிலாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். கறிக்கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு கூலி உயர்வு வழங்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கறிக்கோழி விவகாரம் குறித்து பேச அனுமதிக்கவில்லை, திமுக அரசாங்கம் சர்வாதிகார போக்குடன் நடந்து கொள்கிறது.

இது 40 ஆயிரம் விவசாய குடும்பங்களின் பிரச்சினை, 5 லட்சம் தொழிலாளர்களின் பிரச்சினை. மக்களின் பிரச்சினையை அரசின் கவனத்துக்கு கொண்டுவர கூட அனுமதி மறுத்தால் என்ன செய்வது? அரசாங்கம் இரு தரப்பிலும் பேசி சுமூகமான தீர்வு காண வேண்டும்.

அதேபோல், திமுக பொறுப்பேற்றதிலிருந்து கொசு உற்பத்தியாவதை தடுப்பதில் கவனம் செலுத்தவில்லை. கொசுவினால்தான் பல்வேறு நோய்கள் மக்களை தாக்குகிறது. தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், தென்காசி, தேனி, கடலூர், அரியலூர் உட்பட பல மாவட்டங்களில் சிக்கன் குனியா ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனிவார்டுகள் அமைத்து சிகிச்சை வழங்க வேண்டும்.

சிக்கன் குனியா ஏற்பட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும் சூழல் அமையும். இது குறித்து தான் பூஜ்ஜிய நேரத்தில் பேச அனுமதி கேட்டோம். ஆனால் அனுமதி மறுத்து விட்டனர், அதனால்தான் வெளிநடப்பு செய்தோம்.

அதிமுகவின் தேர்தல் அறிக்கை மக்களிடையே பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. அந்த எரிச்சலில்தான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமாக பதிலளித்து வருகிறார்கள். மாணவர்களின் வாக்குகளை பெறுவதற்கு தான் லேப்டாப் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

மாணவர்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என அவர்கள் நினைத்திருந்தால், கல்லூரி துவங்குவதற்கு முன்பே அவர்கள் லேப்டாப் கொடுத்திருக்க வேண்டும். திமுக ஆட்சி அமைந்ததிலிருந்து சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. இதற்கு முழுக்க முழுக்க காரணம் போதைப் பொருள் விற்பனை தான். அதை தடுக்க இயலாத அரசாக உள்ளது. இத்தனை நிகழ்வுகள் நடைபெறுவதெல்லாம் போதை ஆசாமிகளால் தான். அதுவும் கஞ்சா போதை ஆசாமிகளால் தான். 20 நாட்களில் 46 போக்சோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.


ஒவ்வொரு மாதமும் பெண்களும், சிறுமிகளும் பாதிக்கப்படுகிறார்கள். அதை கட்டுப்படுத்த இந்த அரசால் முடியவில்லை. இதற்கு காரணம் நிரந்தர சட்ட ஒழுங்கு டிஜிபி நியமிக்கப்படாதது தான். அதிமுக ஆட்சியில் பல்வேறு போராட்டங்கள் நடந்தன. திமுகவை போன்று அடக்கமுறை எங்களது ஆட்சியில் இல்லை.

தற்போது எதிர்கட்சிகள் போராட்டம் நடத்தினாலும், அனுமதி கொடுப்பதில்லை. அப்படி போராடினாலும் எங்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் இருப்பதால் விவசாயிகளில் இருந்து அனைவரும் போராடி வருகிறார்கள். ஆறு மாதமாக போராட்டங்கள் நடைபெறுகிறது. இது அரசாங்கத்துக்கு தெரியாதா? இந்த ஆட்சி அகற்றப்பட வேண்டிய ஆட்சி. போராடுபவர்களை திமுக ஒடுக்கப்பார்க்கிறது" இவ்வாறு இபிஎஸ் தெரிவித்தார்.

# சமூக வலைதள பிரச்சாரத்தை தீவிரப்படுத்தும் சீமான்





சென்னை, ஜன.23-

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், காணொலி படைப்புகள் மூலம் சமூக வலைதளங்களில் தேர்தல் பரப்புரையை தீவிரப்படுத்தி வருகிறார்.

2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு 234 தொகுதிகளுக்கும் நாதக வேட்பாளர்களை ஒரே மேடையில் அறிமுகப்படுத்தும் 'மாற்றத்தை விரும்பும் மக்களின் மாநாடு' திருச்சியில் பிப்.21ம் தேதி நடைபெறுகிறது. கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடத்தப்படும் இந்த மாநாட்டை, மக்களிடம் கொண்டு சேர்க்கும் முன்னெடுப்பாக கட்சி பொறுப்பாளர்கள், தொண்டர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி மாநாட்டின் நோக்கங்களையும், அதை பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அரசியல் கருத்துகளுடன் 30 விநாடிகள் முதல் 2 நிமிடங்கள் வரையிலான குறுகிய காணொலிகளாக உருவாக்கி, தங்களது சமூக வலைதள பக்கங்களில் பதிவேற்றம் செய்து, அதை தகவல் தொழில்நுட்ப பாசறையின் அதிகாரபூர்வ கணக்குகளுக்கு மேற்கோள்காட்ட வேண்டும் எனவும், இதில் தேர்வு செய்யப்படும் காணொலிகள் தகவல் தொழில்நுட்ப பாசறையின் அதிகாரபூர்வ பக்கங்களில் பதிவேற்றம் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகப்படியான மக்களை கவரும் வகையில் மிகச்சிறந்த காணொலிகளை உருவாக்கும் படைப்பாளிகளுக்கு சீமான் நேரில் அழைத்து பாராட்டு சான்றிதழ்களையும், பரிசுகளையும் வழங்கி கவுரவிக்க உள்ளார். இத்துடன், தமிழ்த்தேசியத்துக்கு ஆதரவளிக்கும் ஊடகங்களிலும் இவற்றை வெளியிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பானது, தேர்தல் களத்தில் நாதகவின் கருத்துகளை டிஜிட்டல் தளங்களில் வலிமையாகக் கொண்டு சேர்ப்பதற்கான ஒரு முக்கிய உத்தியாகப் பார்க்கப்படுகிறது.

# சட்டீஸ்கர் அதிகாரி வழக்கில் முக்கிய நடவடிக்கை; அமலாக்கத்துறை கூடுதல் விசாரணை நடத்த முடியுமா?

## ஆய்வு செய்ய உச்ச நீதிமன்றம் முடிவு



புதுடெல்லி, ஜன.23-

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகும் அமலாக்கத் துறை கூடுதல் விசாரணை நடத்த முடியுமா என்பது குறித்து உச்ச நீதிமன்றம் ஆய்வு செய்ய உள்ளது. சட்டீஸ்கர் மாநில காங்கிரஸ் முன்னாள் முதல்வர் பூபேஷ் பாகலின் துணைச் செயலாளராகப் பணியாற்றிய சவுமியா சவுராசியா என்பவர் மீது சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ் அமலாக்கத் துறை வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் கைதாகி சிறையில் உள்ள இவர், முதற்கட்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னரும், கூடுதல் விசாரணை என்ற பெயரில் தன்னை நீண்ட காலமாக சிறையில் வைத்துள்ளதாகக் கூறி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அமலாக்கத் துறை வரம்பற்ற அதிகாரத்தைப் பயன்படுத்துவதாகவும், ஜாமீன் கிடைப்பதைத் தடுக்கவே இதுபோன்று செயல்படுவதாகவும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் கபில் சிபல் மற்றும் அபிஷேக் மனு சிங்வி ஆகியோர், 'குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ளது போல கூடுதல் விசாரணை நடத்தும் அதிகாரம், சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தில் அமலாக்கத் துறைக்கு வழங்கப்படவில்லை' என்று வாதிட்டனர். மேலும் 'துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து எதிரிகளை காலவரையற்ற காவலில் வைக்கும் உத்தியை அதிகாரிகள் கையாளுகின்றனர்' என்றும் குற்றம் சாட்டினர். இந்த வாதத்தை ஏற்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் தலைமையிலான அமர்வு, அமலாக்கத் துறைக்கு இத்தகைய அதிகாரம் உள்ளதா என்பது குறித்து பதிலளிக்குமாறு ஒன்றிய அரசு மற்றும் விசாரணை அமைப்புக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. மேலும் இதே கோரிக்கையை வலியுறுத்தி சைதன்யா பாகல் உள்ளிட்டோர் தாக்கல் செய்த 40க்கும் மேற்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை வரும் 28ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

# "ஐரோப்பிய பொருளாதார நலன்களுக்கு இந்தியா அத்தியாவசியமானதாக மாறி வருகிறது" EU பிரதிநிதி பேச்சு

பிரஸ்ஸல்ஸ், ஜன.23-

ஐரோப்பாவின் பொருளாதார நலன்களுக்கு இந்தியா அத்தியாவசியமானதாக மாறி வருவதாகவும், புதுடெல்லியில் நடைபெற உள்ள ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா உச்சி மாநாடு இரு தரப்புக்கும் இடையிலான உறவுகளில் ஒரு முக்கிய திருப்புமுனையாக இருக்கும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைக்கான உயர் பிரதிநிதி காஜா கல்லாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நடைபெற உள்ள குடியரசு தின கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவும், வரும் 27ம் தேதி நடைபெற உள்ள 16வது ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா இடையேயான உச்சிமாநாட்டில் பங்கேற்கவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் மட்டத் தலைவர்கள் இந்தியாவுக்கு வர உள்ள நிலையில், அந்த அமைப்பின் உயர் பிரதிநிதி காஜா கல்லாஸ், ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது: ஐரோப்பாவின் பொருளாதார மீள்திறனுக்கு இந்தியா அத்தியாவசியமானதாக மாறி வருகிறது. வர்த்தகம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், மக்களுக்கு இடையேயான உறவு என பல துறைகளை உள்ளடக்கிய ஒரு வலிமையான புதிய செயல்திட்டத்தை இந்தியாவுடன் இணைந்து செயல்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது. புதுடெல்லியில் நடைபெற உள்ள சந்திப்புகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

போர்கள், நிர்பந்தங்கள், பொருளாதார பிளவுகள் ஆகியவற்றால் சர்வதேச ஒழுங்கு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அழுத்தத்துக்கு உள்ளாகி உள்ளது. இந்த நேரத்தில், இரண்டு பெரிய ஜனநாயக சக்திகள் தயங்கிக் கொண்டிருக்க முடியாது. சர்வதேச சட்டம், ஐ.நா. சாசனம் ஆகியவற்றை பேணிக்காக்கும் பொறுப்பு இரு தரப்பினருக்கும் உள்ளது.

உச்சிமாநாட்டின் மையாக, புதிய மற்றும் விரிவான ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா இடையேயான கூட்டு மூலோபாய நிகழ்ச்சி நிரலை ஏற்றுக்கொள்வது இருக்கும். இது 2030 ம் ஆண்டுக்கான கூட்டாண்மையின் பாதையை வகுக்கும். தலைவர்கள் திட்டம் சார்ந்த வெறும் அறிக்கைகளை மட்டும் வெளியிடாமல், இரு தரப்பு உறவை வார்த்தைகளில் இருந்து செயல்களுக்குக் கொண்டு செல்லும் வகையில் உறுதியான முடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பார்கள்.

மூன்று முக்கிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட உள்ளன. ஒன்று, ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளை முடிவுக்குக் கொண்டு வர இரு தரப்பினரும் இலக்கு நிர்ணயித்துள்ளனர். இரண்டாவதாக, ஐரோப்பிய ஒன்றியம் இந்தியா இடையே பாதுகாப்பு, தற்காப்பு கூட்டாண்மைக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாவதாக, மக்களுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் ஒரு விரிவான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம், மாணவர்கள், தொழிலாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்களின் இயக்கம் எளிதாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார்.

# திமுகவில் இணையமாட்டேன்; அரசியலில் இருந்தே விலகுகிறேன்" வைத்திலிங்கம் ஆதரவாளர் குன்னம் ராமச்சந்திரன்



பெரம்பலூர், ஜன.23-

"என் குடும்பத்தினர் கூறியதால் திமுகவில் இணையும் முடிவிலிருந்து பின்வாங்கினேன். இனி நான் எந்த அரசியல் கட்சியிலும் பயணிக்கப் போவதில்லை. அரசியலில் இருந்தே விலகுகிறேன்" என குன்னம் தொகுதி முன்னாள் எம்எல்ஏ ஆர்.டி.ராமச்சந்திரன் தெரிவித்தார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய குன்னம் ராமச்சந்திரன், "நேற்று வைத்திலிங்கத்துடன் சேர்ந்து திமுகவில் இணைவதாக முடிவெடுத்து அறிவித்தேன். இதனை தொடர்ந்து, திமுகவில் இணைவது குறித்து எனது குடும்பத்தினரிடம் கலந்து பேசினேன். அப்போது ஒட்டுமொத்த குடும்பமும் என் முடிவுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

என்னை பெற்றெடுத்த தாய், வீட்டில் இருக்கும் ஜெயலலிதாவின் படத்தை அகற்ற போகிறாயா எனக் கேட்டார். "அசிங்கமாக உள்ளது. இதெல்லாம் ஒரு வேலையாப்பா" என எனது மகள் கேட்டார். இதனால் கடும் வேதனையடைந்து இரவெல்லாம் உறக்கம் தொலைத்தேன்.

காலையில் எழுந்ததும் அரசியலே வேண்டாம் என அவர்களிடம் என் முடிவைச் சொன்னேன். என் குடும்பத்தினர் கூறியதால் திமுகவில் இணையும் முடிவிலிருந்து பின்வாங்கினேன். எனது குடும்பத்தினரின் எதிர்ப்பு காரணமாகவும், என் உடல்நிலை குறித்த மருத்துவர்களின் ஆலோசனை காரணமாகவும் பொதுவாழ்விலிருந்து விலகிக்கொள்வது என்று நான் முடிவெடுத்துள்ளேன். நேற்று ஒரு பேச்சு, இன்று ஒரு பேச்சு என்பது தவறு என்றாலும், உடல்நிலை கருதியும், குடும்ப நிம்மதிக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளேன். இனி நான் எந்த அரசியல் கட்சியிலும் பயணிக்கப் போவதில்லை. வைத்திலிங்கம் மற்றும் கழக தொண்டர்கள் என்னை மன்னிக்க வேண்டும். என்னோடு உறுதுணையாக இருந்து பயணித்தவர்கள் அவரவர் விரும்பும் கட்சியில் இணைந்து பணியாற்றும்படி கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார். வைத்திலிங்கத்தின் தீவிர ஆதரவாளரான ஆர்.டி.ராமச்சந்திரன், 2016 21 வரை குன்னம் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராகவும், பெரம்பலூர் மாவட்டக்கழக அதிமுக செயலாளராகவும் பதவி வகித்தவர். இவர் வைத்திலிங்கத்துடன் இணைந்து ஓபிஎஸ் ஆதரவாளராக செயல்பட்டு வந்தார்.

# "கீழடியை கண்டு ஆதிக்க சக்தியினருக்கு அச்சம்" அமர்நாத் ராமகிருஷ்ணா கருத்து




மதுரை, ஜன.23-

கீழடியை கண்டு ஆதிக்க சக்தியினர் பயப்படுகின்றனர் என மதுரையில் நடந்த கல்லூரிக் கருத்தரங்கில் மத்திய தொல்லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா பேசினார்.

மதுரை டோக் பெருமாட்டி மகளிர் கல்லூரியில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு விழாவையொட்டி `இந்தியாவை வரலாற்று சிதைவுகளிலிருந்து மீட்பது' குறித்த மாநிலக் கருத்தரங்கம் நடந்தது. வரலாற்றுத்துறை தலைவர் மெர்சி பாக்கியம் வரவேற்றார். கல்லூரி முதல்வர் பியூலா ஜெய தலைமை வகித்தார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி பேசினார்.

கருத்தரங்கில் மத்திய தொல் லியல் துறை கண்காணிப்பாளர் அமர்நாத் ராமகிருஷ்ணா பேசியதாவது: சங்க காலத் தமிழர்களின் நகர நாகரிகம் தோன்றியதற்கு ஆதாரங்கள் கீழடியில் கிடைத்துள்ளன. தமிழிலுள்ள தொன்மையான இலக்கியங்களுக்கு ஆதாரங்கள் இல்லை என இதுவரை சொல்லி வந்தனர்.

ஆனால், கீழடியில் இலக்கியங்கள் குறிப்பிடும் சான்றுகளுக்கு தொல்லியல் ரீதியாக ஆதாரங்கள் கிடைத்துள்ளன. ஆதாரங்கள் கிடைத்தும் தமிழ் இலக்கியத்தின் உண்மைத் தன்மையை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

இதுவரை கி.மு.3லிருந்து கி.பி.3ம் நூற்றாண்டு காலத்தையே சங்க காலம் எனக் குறிப்பிட்டனர். அதைப் பொய்யாக்கும் வகையில் அதற்கும் 500 ஆண்டுகளுக்கு முந்தையது கீழடி நாகரிகம்.


கீழடியில் கிடைத்த தொல்லியல் ஆதாரங்கள் மூலம் கி.மு.8ம் நூற்றாண்டு காலத்திலேயே சங்க காலத் தமிழர்களின் நகர நாகரிகம் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

கி.மு.5 லிருந்து கி.மு.8ம் நூற்றாண்டு காலத்தில் கீழடி பெரிய நகரமாக வளர்ந்துள்ளது. அதற்குப் பின்பு கி.மு. 1ம் நூற்றாண்டில் அங்குள்ள நகர நாகரிகம் அழியத் தொடங்கியதாக காலக் கணிப்பு உள்ளது.

இத்தகைய தொல்லியல் ஆதாரங்களை ஏற்க மறுக் கின்றனர். அறிவியல்பூர்வமாக தொல்லியல் ஆதாரங்கள் உள்ளதால் கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிடாமல் மூடி மறைக்கின்றனர். ஆதிக்க சக்தியினர் கீழடியைக் கண்டு பயப்படுகின்றனர். இவ்வாறு பேசினார்.

முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம், சென்னை ராணி மேரி கல்லூரி வரலாற்றுத் துறைப் பேராசிரியை தேன் மொழி, வழக்கறிஞர் மதிவதனி உள்ளிட்டோர் பேசினர்.

# போலி ‘பிஸ்ஸா ஹட்’ உணவகத்தை திறந்து வைத்த பாக். அமைச்சர் நெட்டிசன்கள் கிண்டல்




சியால்கோட், ஜன.23-

பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் போலி ‘பிஸ்ஸா ஹட்' கிளையைத் திறந்து வைத்த சம்பவம் சர்வதேச அளவில் கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாகியுள்ளது.

பாகிஸ்தானின் சியால்கோட் ராணுவக் குடியிருப்பு பகுதியில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஒரு உணவகத்துக்கு, அமெரிக்காவின் புகழ்பெற்ற பிஸ்ஸா ஹட் நிறுவனத்தின் பெயர் மற்றும் சின்னங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இந்த உணவகத்தின் திறப்பு விழா மிக விமரிசையாக நடைபெற்றது.

மலர் அலங்காரங்கள், சிவப்புக் கம்பள வரவேற்பு என அமர்க்களப்பட்ட அந்த விழாவில், பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு ரிப்பனை வெட்டி உணவகத்தை தொடங்கி வைத்தார்.

இந்தத் திறப்பு விழா தொடர்பான புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகின. இதைப் பார்த்த பிஸ்ஸா ஹட் பாகிஸ்தான் நிறுவனம் உடனடியாக ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில், "சியால்கோட்டில் திறக்கப்பட்டுள்ள அந்த உணவகம் எங்களது அதிகாரப்பூர்வ கிளை அல்ல. அது போலியானது மற்றும் எங்கள் நிறுவன பெயர் தவறாகப் பயன்படுத்துகிறது. இதற்கும் பிஸ்ஸா ஹட் நிறுவனத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

எங்கள் பெயரை பயன்படுத்த தடை விதிக்கக் கோரி புகார் அளித்துள்ளோம்" என்று கூறப்பட்டுள்ளது. சமூக வலைதளங்களில் கேலி இதனிடையே, நாட்டின் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஒருவர், ஒரு உணவகத்தை திறந்து வைப்பதற்கு முன்பாக அது உண்மையானதா என்பதைக் கூட சரி பார்க்காதது ஏன் என்று நெட்டிசன்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

சமூக வலைதளம் ஒன்றில், "ஒரு ரிப்பன் வெட்டு, ஒரு மறுப்பு அறிக்கை இது ஒரு புதிய உலக சாதனை" என ஒருவர் பதிவிட்டுள்ளார். "பாதுகாப்பு அமைச்சருக்கே பாதுகாப்பு இல்லாத நாடு" என்று மற்றொருவர் பதிவிட்டுள்ளார்.

# சட்டப்பேரவையில் எதிரொலித்த கறிக்கோழி விவசாயிகள் விவகாரம்: அதிமுக வெளிநடப்பு



சென்னை, ஜன.23-

கறிக்கோழி விவசாயிகள் விவகாரம் குறித்து அதிமுக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்த நிலையில், “பதில் தயாரானதும் அதுகுறித்து விவாதிக்கலாம்” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்ததையடுத்து அதிமுகவினர் வெளிநடப்பு செய்தனர்.

கடந்த சில நாட்களாக கோழி இறைச்சியின் விலை பல மடங்கு உயர்ந்திருப்பதால், அசைவ பிரியர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ.200 என்ற விலையில் இருந்து வந்தது. தற்போது பல மடங்கு அதிகரித்து சுமார் ரூ.380 வரை எட்டியுள்ளது. கோழித் தீவனத்தின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் விலையேற்றம் என கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், சட்டப்பேரவையில் கறிக்கோழி விவகாரம் தொடர்பாக அதிமுக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தது. பின்னர் இந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க வலியுறுத்தி சட்டப்பேரவையில் அதிமுக எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர். ஆனால் அதிமுகவின் கவன ஈர்ப்பு தீர்மானத்தை எடுக்க சபாநாயகர் அப்பாவு அனுமதி மறுத்ததால், எம்எல்ஏக்கள் அமளியில் ஈடுபட்டனர்.

பின்னர் இது குறித்து முதல்வர் ஸ்டாலின் பதிலளித்தார். அப்போது அவர் பேசும்போது, “கறிக்கோழி விவகாரம் குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்களிடம் கலந்து ஆலோசித்து பதில் கிடைத்த பிறகு, நாளை விவாதிக்கலாம். இப்போது நேரத்தை வீணடிக்க வேண்டாம்” என்று தெரிவித்தார். இருப்பினும் அதிமுகவினர் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டு வெளிநடப்பு செய்தனர்.

முன்னதாக நேற்று இபிஎஸ் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “தமிழகத்திலுள்ள 'கறிக்கோழி பண்ணை விவசாயிகள்' கறிக்கோழி விற்கும் நிறுவனங்களுடன் ஒப்பந்த அடிப்படையில் கூலிக்கு கோழி வளர்ப்பு தொழில் செய்து வருகிறார்கள்.

உணவு மற்றும் மூலப்பொருட்கள், மின் கட்டண உயர்வு உள்ளிட்ட அனைத்தும் பல மடங்கு உயர்ந்துவிட்ட நிலையில் தற்போது இந்நிறுவனங்கள் வளர்ப்பு கூலியாக வழங்கும் கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய் 50 பைசாவை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கடந்த 6 மாதங்களாக பல கட்டப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

தங்களது போராட்டங்களினால் எந்தவித பயனுமில்லாததால், 1.1.2026 முதல் உற்பத்தி நிறுத்தப் போராட்டம் நடைபெறும் என்று பண்ணையாளர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து திமுக அரசு 21.1.2026 அன்று முத்தரப்பு பேச்சுவார்த்தை நடைபெறும் என்று கூறியது. இந்நிலையில் விடியா திமுக அரசு இம்மாத ஆரம்பத்தில் 10 நிர்வாகிகளை எந்தவித காரணமுமின்றி கைது செய்தது.

முத்தரப்பு பேச்சுவார்த்தை தோல்வி அடைந்த நிலையில், கறிக்கோழி பண்ணை நிர்வாகிகளை (விவசாயிகளை) காவல்துறை மீண்டும் கைது செய்துள்ளதாக செய்திகள் வருகிறது. கைதுசெய்யப்பட்ட நிர்வாகிகளை உடனடியாக விடுவிப்பதுடன், அவர்களது பிரச்சனைக்கு சுமூக தீர்வு காண முதல்வரை வலியுறுத்துகிறேன்.” என்று குறிப்பிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# தங்கம், வெள்ளி விலை தொடர்ந்து உச்சம்




சென்னை, ஜன.23-

சென்னையில் ஒரே நாளில் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.4,120 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1,15,320க்கு விற்பனையானது.

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, சர்வதேச அரசியல் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் முதல் தங்கம் விலை உயர்ந்து வருகிறது. டிச.15ம் தேதி முதல் முறையாக ஒரு பவுன் ரூ.1 லட்சத்தைத் தாண்டி விற்பனையானது.

இந்தச் சூழலில் கடந்த சில நாட்களாக ராக்கெட் வேகத்தில் விலை ஏறிய தங்கம், நேற்று முன்தினம் ரூ.1.11 லட்சத்தைக் கடந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்றும் விலை அதிகரித்து, கிராம் ஒன்றுக்கு ரூ. 515 உயர்ந்து ரூ.14,415க்கும், பவுனுக்கு ரூ.4,120 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 15,320க்கும் விற்பனையாகி புதிய வரலாறு படைத்துள்ளது.

அதேபோல், 24 காரட் சுத்த தங்கம் ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 25,800க்கு விற்கப்பட்டது. கடந்த 5 நாட்களில் மட்டும் பவுனுக்கு சுமார் ரூ.9,480 வரை விலை கூடியுள்ளது.

தங்கத்தை போலவே வெள்ளி விலையும் நேற்று ஒரே நாளில் கிலோவுக்கு ரூ.5,000 அதிகரித்தது. ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.3 லட்சத்து 45 ஆயிரத்துக்கு விற்பனையானது. ஒரு கிராம் வெள்ளி ரூ.345க்கு விற்கப்பட்டது.

# “பூமியில் மனிதர்கள் இடையிலான வாக்குவாதங்கள் முட்டாள்தனமாக தோன்றும்”

## சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி அனுபவம்



புதுடெல்லி, ஜன.23-

நாசாவில் 27 ஆண்டு காலம் பணியாற்றியவர் விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் (60). இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இவர் 3 முறை விண்வெளி மையத்துக்கு சென்று மொத்தம் 608 நாட்கள் தங்கியுள்ளார்.

சர்வதேச விண்வெளி மையத்தில் நீண்ட காலம் தங்கியிருந்த நாசா வீரர்களில் இவர் இரண்டாம் இடத்தில் உள்ளார். இவர் கடைசியாக போயிங் நிறுவனத்தின் சோதனை விண்கலம் ஸ்டார்லைனரில் 8 நாள் பயணமாக சர்வதேச விண்வெளி மையம் சென்றார். ஆனால் அதில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டதால் அவர் அங்கு தொடர்ந்து 286 நாட்கள் தங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

பின்னர் இவர் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலத்தில் பூமி திரும்பினார். இவர் சர்வதேச விண்வெளி மையத்தில் தங்கியிருந்த போது 9 முறை விண்வெளி நடைபயணம் மேற்கொண்டுள்ளார். கடந்தாண்டு டிசம்பர் 27ம் தேதி இவர் நாசாவில் இருந்து ஓய்வு பெற்றார். தற்போது இந்தியா வந்துள்ள சுனிதா வில்லியம் டெல்லியில் உள்ள அமெரிக்கன் மையத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றார்.

அப்போது அவர் கூறியதாவது: விண்வெளி பயணம் என்பது ஒரு குழு விளையாட்டு. இதில் அனைத்து நாட்டு விஞ்ஞானிகளிடம் ஒன்றிணைந்து ‘இது நமது கிரகம், நாம் விண்வெளியில் ஒன்றாக உள்ளோம்’ என்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டும். விண்வெளிக்கு சென்றவுடன் நமது நாடு எங்குள்ளது என பார்க்க விரும்புவோம். எனது தந்தை இந்தியாவைச் சேர்ந்தவர், தாய் ஸ்லோவேனியாவைச் சேர்ந்தவர்.

எனவே, நான் இந்த இடங்களை விண்ணில் இருந்து பார்ப்பேன். நமது பூமி கோள் உயிர்ப்புடன் இருக்கிறது. சிலர் இவற்றை வெறும் பாறைகளாக பார்க்கலாம். ஆனால், இது நகர்ந்து கொண்டிருக்கிறது. பல காலநிலைகளை சந்திக்கிறது. கடலின் நிறத்தில் மாற்றம் ஏற்படுகிறது. பூமியின் வட மற்றும் தென் துருவத்தில் பனிக்கட்டிகள் சூழ்ந்திருப்பதை பார்க்கலாம்.

நமது பூமி பார்க்க மிக அழகாக இருக்கும். விண்ணில் இருந்து பூமியை பார்க்கும் போது வாழ்க்கை பற்றி நமது எண்ணங்கள் மாறுபடும். நாம் அனைவரும் ஒரு கிரகத்தைச் சேர்ந்தவர், நாம் ஒன்றிணைந்து, எளிதாக பணியாற்ற வேண்டும் என உணர வைக்கும். பூமியில் மனிதர்கள் இடையே ஏற்படும் வாக்குவாதங்கள் எல்லாம் முட்டாள்தனமாக தோன்றும். இவ்வாறு சுனிதா கூறினார்.



■ மதுரையில் ஏழை, எளியவர்களுக்கு உதவி ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் புத்தாண்டு, பொங்கல் விழாவை முன்னிட்டு திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர், எழுத்தாளர் விவேக் ராஜ் இணைந்து ஏழை, எளியவர்களுக்கு உடை, பணம், இனிப்புகள் வழங்கினார்கள். விடுபட்ட வர்களுக்கு செல்லூர் மற்றும் நரிமேடு 6 நபர்களுக்கு சேலை, ரொக்க பணம், தேநீர் வழங்கினார்கள்.

# ஜார்க்கண்டில் மூடப்படாத ரயில்வே கேட்டை கடந்த லாரி மீது ரயில் மோதி விபத்து!

ராஞ்சி, ஜன.23-

ஜார்கண்ட் மாநிலம் ரோஹினி என்ற பகுதியில் ஜஷிடிஹ் ஹவுரா வழித்தடத்தில் மூடப்படாத ரயில்வே கேட்டை கடந்த லாரி மீது ரயில் மோதி விபத்து ஏற்பட்டது. ஆபத்தை உணர்ந்து ரயிலை அவசரமாக நிறுத்தியதால், உயிர்ச்சேதம் எதுவும் இல்லை என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ரதசப்தமி; 24ம்தேதி முதல் 26ம்தேதி வரை சர்வ தரிசன டோக்கன் ரத்து



திருமலை, ஜன.23-

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் ரதசப்தமியையொட்டி வரும் 24ம்தேதி முதல் 26ம்தேதி வரை சர்வ தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டிருப்பதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது. திருப்பதி ஏழுமலையான் கோயிலில் வரும் 25ம்தேதி ரதசப்தமி நடைபெற உள்ளது. ஆண்டு பிரம்மோற்சவத்தின்போது நடைபெறும் 7 சேவைகள் அன்று அதிகாலை முதல் இரவு வரை நடைபெறும். இதில் ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் ஏழுமலையான் நான்கு மாடவீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். மினி பிரம்மோற்சவம் என்று அழைக்கப்படும் இச்சேவையை தரிசிக்க சனி, ஞாயிறு, திங்கள் விடுமுறை தினமாக இருப்பதால் அதிகளவு பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. பக்தர்களின் வசதிக்கான ஏற்பாடுகளை தேவஸ்தானம் செய்து வருகிறது. இதுதொடர்பாக திருமலையில் உள்ள அன்னமய்யா பவனில் நேற்று மாவட்ட மற்றும் தேவஸ்தான அதிகாரிகளுடன் செயல் அலுவலர் அனில்குமார் சிங்கால், கூடுதல் செயல் அலுவலர் வெங்கைய சவுத்ரி தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடந்தது. அப்போது செயல் அலுவலர் அனில்குமார் சிங்கால் பேசியதாவது: ‘மினி பிரமோற்சவம்’ என அழைக்கப்படும் ரதசப்தமி நாளில் கோயிலின் நான்கு மாட வீதிகள், வரிசைகள் மற்றும் வெளிப்புற பகுதிகளில் பக்தர்களுக்கு தொடர்ந்து உணவு வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ரதசப்தமி நாளில் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு கூடுதலாக 5 லட்சம் லட்டுகளை இருப்பு வைத்திருக்க வேண்டும். வரும் 25ம்தேதி ஆர்ஜித சேவை, சிறப்பு தரிசனங்கள், கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சஹஸ்ர தீப அலங்கார சேவைகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், 1 வயது குழந்தைகளின் பெற்றோர், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு தரிசனங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் வரும் 24ம்தேதி முதல் 26ம்தேதி வரை திருப்பதியில் வழங்கப்படும் சர்வ தரிசன டோக்கன்கள் வழங்குவது ரத்து செய்யப்பட்டுள்ளது. அதேபோல் விஐபி தரிசனங்கள் ரத்து செய்யப்படுகிறது. எனவே ஜனவரி 24ம்தேதி விஐபி தரிசனங்களுக்கு எந்த பரிந்துரை கடிதங்களும் ஏற்கப்படாது என்றார். 18 மணி நேரம் காத்திருப்பு திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நேற்று 74,056 பக்தர்கள் தரிசனம் செய்தனர். 27,517 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். உண்டியலில் ரூ.3.98 கோடியை காணிக்கையாக செலுத்தினர். இன்று காலை வைகுண்டம் காத்திருப்பு வளாகத்தில் உள்ள 17 அறைகளில் பக்த ர்கள் காத் திருக்கின்றனர். இவர்கள் 18 மணி நேரம் காத்திருந்து தரிசனம் செய்து வருகின்றனர். ரூ.300 டிக்கெட் பெற்ற பக்தர்கள் சுமார் 4 மணி நேரத்திலும், நேர ஒதுக்கீடு டிக்கெட் பெற்ற பக்தர்கள் 6 மணி நேரத்திலும் தரிசனம் செய்தனர்.

# சிவகங்கை, காரைக்குடி தொகுதிகளை விட்டுக் கொடுப்பது யார்? தே.ஜ.கூட்டணியில் அமமுக இணைந்ததால் எதிர்பார்ப்பு



காரைக்குடி, ஜன.23-

தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுக இணைந்ததால் சிவகங்கை, காரைக்குடி தொகுதிகளை விட்டுக்கொடுப்பது யார் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் தயாராகி வருகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை, காரைக்குடி, திருப்பத்தூர், மானாமதுரை (தனி) ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. 2021 தேர்தலில் காரைக்குடியில் அதிமுக கூட்டணியில் பாஜக சார்பில் ஹெச்.ராஜாவும், திமுக கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் மாங்குடி, அமமுக சார்பில் தேர்போகிபாண்டி போட்டியிட்டனர்.

மாங்குடி 75,954 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதற்கு அடுத்தபடியாக, ஹெச்.ராஜா 54,365 வாக்குகள், தேர்போகி பாண்டி 44,864 வாக்குகள் பெற்றனர். கடந்த 2024 எம்பி தேர்தலில் சிவகங்கை மக்களவைத் தொகுதியில் போட்டியிட்ட பாஜக, காரைக்குடி, சிவகங்கை, மானாமதுரை ஆகிய 3 சட்டப்பேரவைத் தொகுதிகளில் அதிமுகவை பின்னுக்கு தள்ளி 2வது இடம் பிடித்தது.

இதனால் இந்த தேர்தலில் காரைக்குடி, சிவகங்கை ஆகிய 2 தொகுதிகளை தங்களுக்கு ஒதுக்க வேண்டுமென பாஜக எதிர்பார்க்கிறது. சிவகங்கை தொகுதியில் அதிமுக மாவட்டச் செயலாளர் செந்தில்நாதன் சிட்டிங் எம்எல்ஏவாக இருப்பதால், காரைக்குடியை குறி வைத்து பாஜக ஏற்கெனவே தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டது.

அதேசமயத்தில் கடந்த மாதம் தேவகோட்டை வந்த டி.டி.வி.தினகரன் இந்த முறை கட்டாயம் காரைக்குடியில் அமமுக சார்பில் தேர்போகி பாண்டி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என அறிவித்தார். இந்நிலையில் நேற்று அதிமுக, பாஜக அங்கம் வகிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அமமுக இணைந்துள்ளது.

அக்கட்சிக்கு குறைவான தொகுதிகளே ஒதுக்கப்படும் என்பதால், கட்டாயம் காரைக்குடி கிடைக்கும் என அக்கட்சியினர் தற்போதே கூறத் தொடங்கியுள்ளனர். கடந்த சில தேர்தல்களாக தொடர்ந்து காரைக்குடியில் பாஜக போட்டியிட்டு வரும் நிலையில், அத்தொகுதியை விட்டுக் கொடுக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அப்படியே விட்டுக்கொடுத்தாலும், அதற்கு அடுத்ததாக சிவகங்கை தொகுதியை கேட்கும். ஆனால் ஏற்கெனவே சிவகங்கையில் சிட்டிங் எம்எல்ஏவாக செந்தில்நாதன் இருப்பதால், பாஜக கோரிக் கையை அதிமுக ஏற்குமா? என்பது கேள்விக்குறியே.

கடந்த 2021 தேர்தலில் சிவகங்கை, திருப்பத்தூர், மானாமதுரை (தனி) ஆகிய 3 தொகுதிகளில் அதிமுக போட்டியிட்டு சிவகங்கையில் மட்டும் வெற்றி பெற்றது. இதில் திருப்பத்தூர் தொகுதியில் தொடர்ந்து 4 முறை வென்ற அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் எம்எல்ஏவாக உள்ளார்.

அவரை எதிர்த்து பலமான வேட்பாளர் நிறுத்தப்படுவார் என்று எதிர்பார்ப்பு இருப்பதால் இந்த முறையும் அதிமுகவே போட்டியிடும் என கூறப்படுகிறது. அதேபோல் அதிமுக கோட்டையாக கருதப்பட்டு, கடந்த முறை திமுக விடம் இழந்த மானாமதுரையை இந்த முறையும் அதிமுக விட்டுக் கொடுக்காது என கூறப்படுகிறது.

பாஜக, அமமுக கட்சிகளும் திருப்பத்தூர், மானாமதுரை தொகுதிகளை விரும்பவில்லை. இதனால் காரைக்குடி, சிவகங்கையை கூட்டணி கட்சிகளுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு, மானாமதுரை, திருப்பத்தூர் ஆகிய 2 தொகுதிகளில் மட்டும் அதிமுக போட்டியிடுமா? தாங்கள் வெற்றி பெற்ற சிவகங்கை தொகுதியை சிட்டிங் எம்எல்ஏ செந்தில்நாதனோ, அதிமுகவோ கூட்டணி கட்சிகளுக்கு விட்டுக் கொடுப்பார்களா என்ற கேள்வி சம்பந்தப்பட்ட கட்சியினரிடையே ஏற்பட்டுள்ளது.

## தமிழர் திருநாளாம் தைத் திருநாளை பொதுமக்கள் மகிழ்ச்சியுடனும், எழிச்சியுடனும் கொண்டாடும் வகையில்

# பொங்கல்பரிசுத் தொகுப்பாக ரூ.3000/ ரொக்கத்துடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை மற்றும் 1 முழுக்கரும்பு வழங்கிய முதல்வருக்கு ஈரோடு மாவட்ட பயனாளிகள் மகிழ்ச்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடைமுறையில் உள்ள அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் (2026) விழாவை சிறப்பாக கொண்டாட பொங்கல் பரிசுத்தொகுப்பாக ரூ.3,000/ ரொக்கத்துடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை மற்றும் 1 முழுக்கரும்பு மற்றும் வேட்டி, சேலை வழங்கப்படும் என அறிவித்து வழங்கியுள்ளார்கள்.



ஈரோடு மாவட்டத்தில் செயல்படும் 1,270 நியாயவிலைக் கடைகள் மூலம் பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகிக்கப்பட்டது. இதன்மூலம் ஈரோடு மாவட்டத்தில் 7,45,155 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 1,373 குடும்பத்தினர் பயன்பெற்றார்கள். இதில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை மற்றும் முழுக்கரும்புடன் ரூ.3000/ ரொக்கம், வேட்டி, அடங்கியுள்ளது. 1 சேலை

தமிழர் திருநாளாம் தைத்திருநாளை பொதுமக்கள் மகிழ்ச்சியுடனும், எழிச்சியுடனும் கொண்டாடும் வகையில் பொங்கல் பரிசுத்தொகுப்பாக ரூ.3000/ ரொக்கத்துடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சக்கரை, 1 முழுக்கரும்பு மற்றும் வேட்டி, சேலை வழங்கியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் மனதில் என்றும் நிலைத்து நிற்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பொங்கல் பரிசுத்தொகுப்பு பெற்ற மாணிக்கம்பாளையம், வீட்டு வசதி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த திருமதி. ஆலிஸ் நிர்மலா, வயது 52, அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது,

எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். நான் வீட்டையும் குடும்பத்தையும் கவனித்து வருகிறேன். எனக்கு 2 மகன்கள் உள்ளார்கள். எனது கணவரின் வருமானத்தை கொண்டு குடும்பத்தையும் எனது மகன்களையும் படிக்க வைப்பதே பெரும் கஷ்டமாக இருக்கிறது. கூலி வேலையும் எனது கணவருக்கு தொடர்ந்து கிடைப்பதில்லை. இதனால்



குடும்பத்தை நடத்துவதே மிகவும் கடினமாக இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.3,000/ ரொக்கத்துடன் அரிசி, சர்க்கரை, வேட்டி, சேலை மற்றும் கரும்பு ஆகிய பொருட்கள் வழங்கப்படும் என அறிவித்தார்கள். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து இந்த பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்றுக் கொண்டேன். இந்த ரொக்கம் எங்களை போன்ற நடுத்தர மற்றும் ஏழை மக்களுக்கு பெரிய உதவியாக இருந்தது. இந்த ரொக்கப்பணத்தை வைத்து வீட்டுக்கு தேவையான காய்கறி மற்றும் மளிகைப்பொருட்களை வாங்கி இந்த பொங்கலை மிகச்சிறப்புடன் கொண்டாடினோம். பொங்கலை முழு கரும்பு, பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3,000/ ரொக்கம், வேட்டி, சேலை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாகவும், எங்கள் பகுதி பொதுமக்களின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

பொங்கல் பரிசுத்தொகுப்பு பெற்ற மாணிக்கம்பாளையம் வீட்டு வசதி குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த திருமதி.ராதா, வயது 32, அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்ததாவது,

நான் கூலி வேலைக்கு சென்று, அதன் மூலம் கிடைக்கும் வருவாயை



வைத்து வாழ்ந்து வருகிறேன். எனக்கு அம்மா அப்பா இருவரும் இல்லை. எனக்கு 1 மகள் மற்றும் 1 மகன் உள்ளார்கள். இந்த பொங்கலை கொண்டாட கையில் பணம் இல்லை என்று மனம் வருந்தி கொண்டிருந்த நிலையில் பொங்கல் தொகுப்புடன் ரொக்கம் ரூ.3,000/ வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிந்திருந்தார். இந்த தொகுப்பினை மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பெற்றுக்கொண்டேன். அரிசி, சர்க்கரை மற்றும் கரும்பு ஆகியவை தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருந்தது. எவரையும் எதிர்பாராமல் மகிழ்ச்சியோடு நானும் என் குழந்தைகளுடன் தைத்திருநாளை சிறப்பாக கொண்டாடிட தாய் வீட்டு சீதனமாக இந்த பொங்கலை தொகுப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக மகிழ்ச்சியுடன் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

## மதுரை மாவட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குடியரசு தினத்தில் கிராமசபை கூட்டம் நடைபெறும் மாவட்ட ஆட்சியர்

மதுரை, ஜன.23-

மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் குடியரசுதினமான 26.01.2026ம் தேதியன்று கிராம சபை கூட்டம் நடைபெற உள்ளது.

26.01.2026 அன்று நடைபெறும் குடியரசு தின கிராமசபைக் கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம், கிராம ஊராட்சிகளின் தணிக்கை அறிக்கை கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மக்கள் திட்டமிடல் இயக்கம் மூலம் 202627 ஆம் நிதியாண்டிற்கான கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் பெறுதல் தொழிலாளர் வரவு செலவுத் திட்டப் பணிகள் நலிவுநிலை குறைப்பு நிதி தூய்மை பாரத இயக்கம், ஜல் ஜீவன் திட்டம், சிறு பாசன ஏரிகள் புதுப்பித்தல் குறித்த விவரம். தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர கூட்டப் பொருட்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

மேற்படி நடைபெறும் கிராம சபை கூட்டங்களில் அவ்வூராட்சியில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வாக்காளர்களும் கலந்து கொள்வது முக்கிய கடமையாகும். மேலும் கிராம சபை விவாதங்களில் பயனாளிகள் தேர்வு மற்றும் அரசால் நிறைவேற்றப்படும். திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

எனவே மதுரை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.



■ மதுரை மாவட்டம், ஹோட்டல் கோர்ட்யார்ட் மேரியாட்டில் தொல்லியல் துறை சார்பில், தமிழ்நாடு அகழாய்வுகளில் அண்மைக்கால அறிவியல் ஆய்வுகள் என்ற தலைப்பில் நடைபெறும் பன்னாட்டுக் கருத்தரங்கினைஅமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்து, புத்தகங்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் தலைவர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர்/சிந்து வெளி ஆய்வு மைய மதிப்புறு ஆலோசகர் முனைவர் பாலகிருஷ்ணன், (பணிநிறைவு) மாநகராட்சி துணை மேயர் நாகராஜன், தமிழ்நாடு தொல்லியல்துறை கல்வி மற்றும் ஆய்வு ஆலோசகர் பேராசிரியர் ராஜன், தொல்லியல்துறை இணை இயக்குநர் முனைவர் சிவானந்தம்ஆகியோர் உடன் உள்ளனர்.



■ தமிழக வெற்றிக் கழகத்திற்கு தேர்தல் ஆணையம் விசில் சின்னம் ஒதுக்கியதை தொடர்ந்து, மதுரை அலங்காநல்லூர் கேட்டுகடையில், தமிழக வெற்றிக் கழகம் வடக்கு மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லானை தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

## மாவட்ட, மாநில அளவில் ”இது நம்ம ஆட்டம் 2026” முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா : திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தகவல்

முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு விழா ”இது நம்ம ஆட்டம் ஸ்ரீ 2026 ”தமிழ்நாட்டின் மொத்தம் 388 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 38 மாவட் டங்களிநடைபெறவிருக்கும் மாபெரும் விளையாட்டு கொண்டாட்டம். இது அடிப்படைகளவிளையாட்டு ஆர்வத்தை புதுப்பித்து விளையாட்டின் மூலம் சமூக ஒற்றுமையைவலுப்படுத்தும். மாநில அளவில் குழு போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல்பரிசாக ரூ.75 ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூ.50 ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூ.25ஆயிரமும் வழங்கப்படும். மாவட்ட அளவில் தனிநபர் மற்றும் குழு போட்டிகளில் பங்குபெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.6000/ ஆயிரமும், இரண்டாம்பரிசாக தலா ரூ.4000/ ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலாரூ. 2000/ஆயிரமும்,ஊராட்சி ஒன்றிய அளவில் தனிநபர் மற்றும் குழு போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி

பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா ரூ.3000/ ஆயிரமும், இரண்டாம் பரிசாகதலாரூ.2000/ ஆயிரமும், மூன்றாம் பரிசாக தலா ரூ. 1000/ஆயிரமும்,பரிசாகவழங்கப்பட உள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் 25.01.2026 முதல் 27.01.2026 வரை அவிநாசிவட்டத்தில் அவிநாசி எஸ்.கே.ஆல் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியிலும், திருப்பூர்வட்டத்தில் நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஜெய்வாபாய் பெண்கள் மாதிரிமேல்நிலைப் பள்ளியிலும், ஊத்துக்குளி வட்டத்தில் கொங்கு வேளாளர் மெட்ரிக்மேல்நிலைப் பள்ளியிலும், பல்லடம் வட்டத்தில் ஆண்கள் அரசு மேல்நிலைப்பள்ளி,பெண்கள்அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பொங்கலூர் வட்டத்தில் பி.வி.கே.என்மேல்நிலைப் பள்ளியிலும், தாராபுரம் வட்டத்தில் சி.எஸ்.ஐ ஆண்கள் மேல்நிலைப்பள்ளியிலும், குண்டடம் வட்டத்தில் குண்டடம் அரசு மேல்நிலைப்பள்ளியிலும், மூலனூர் வட்டத்தில் மூலனூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும்,

உடுமலைப்பேட்டை வட்டத்தில் உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கலை மற்றும்அறிவியல் கல்லூரியிலும், மடத்துக்குளம் வட்டத்தில் கணியூர் எஸ்.வி. மேல்நிலைப்பள்ளியிலும். குடிமங்கலம் வட்டத்தில் குடிமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி,பெதப்பம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியிலும், காங்கேயம் வட்டத்தில்நத்தக்காடையூர் காங்கேயம் இன்ஸ்டிடியூட்லும், வெள்ளக்கோவில் வட்டத்தில் முத்தூர்அரசு மேல்நிலைப் பள்ளியிலும் நடை பெறவுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் அதிக அளவு எண்ணிக்கையில் வீரர்/ வீராங்கனைகள் கலந் து கொண்டு பரிசு பெற்றிடவும் அதிக அளவில் மக்கள் தெரிந்து கொண்டு பயன்பெறவும் அதிக அளவில் பங்கு பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்துள்ளார்கள்.

## குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம், தமிழ்நாட்டிற்கு நவீன கிளைச் சிறைகள் தேவை இல்லை

### பேரவையில் அமைச்சர்கள் தகவல்!!

சென்னை, ஜன.23-

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரின் 3வது நாள் அமர்வு தொடங்கியது. வினாக்கள் விடை நேரத்தில் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சம்மந்தப்பட்ட துறை அமைச்சர்கள் பதிலளித்து வருகின்றனர்.



அமைச்சர் கே.என்.நேரு : ஊத்துக்கோட்டை பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கும்மிடிப்பூண்டி தொகுதி ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த பரிசீலிக்கப்படுகிறது. சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று மாநகரங்களில் குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருப்பூரிலும் இத்திட்டத்தை தொடங்க அரசு தயாராக உள்ளது

அமைச்சர் ரகுபதி : தமிழ்நாட்டில் குற்றச் சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க திராவிட மாடல் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. குற்றங்களை குறைத்து சிறைச்சாலைகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம். சிறைச்சாலைகளை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக, குற்றம் இழைத்தவர்களுக்கு திருந்துவதற்கான வாய்ப்பை வழங்கி நல்வழிப்படுத்தும் முயற்சியை சிறைத்துறை மேற்கொண்டு வருகிறது. எனவே கலசப்பாக்கத்தில் சிறைச்சாலை தற்போது அவசியமில்லை. தமிழ்நாட்டிற்கு நவீன கிளைச் சிறைகள் தேவை இல்லை.

அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் : திராவிட மாடல் ஆட்சியில் இதுவரை 22 லட்சம் நபர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் சீறிய முயற்சியால் சென்னையையொட்டிய பகுதிகளில் உள்ள 8,000 பேருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. விரைவில் விடுபட்ட மக்களுக்கும் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன்: “தமிழ்நாடெங்கும் கிராமங்களின் பெயர்கள் தமிழிலேயே தொடர நடவடிக்கை எடுக்கப்படும். திருப்பூரில் சாயப் பிரச்சனை, குடிநீர் பிரச்சனை, ரயில்வே பிரச்சனை என அனைத்து முக்கியமான விஷயங்களுக்கும் தனிகவனம் செலுத்தி, நகரத்தை முற்றிலும் மேம்படுத்தி வருகின்றோம்.

அமைச்சர் எ.வ.வேலு : கோவில்பட்டியில் ஆய்வு மாளிகை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

## ராணுவ வாகனம் பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது: காஷ்மீரில் வீரர்கள் 10 பேர் உயிரிழப்பு

ஸ்ரீநகர் : ஜன.23-

ஜம்மு காஷ்மீரின் தோடா மாவட்டத்தில் இன்று ( ஜனவரி இருபத்து இரண்டு ) ராணுவ வாகனம் ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதில் பத்து வீரர்கள் உயிரிழந்தனர் , மேலும் பலர் காயமடைந்தனர் . ஜம்மு காஷ்மீர் மாநிலம் தோடா மாவட்டத்தில் ராணுவ வாகனம் ஒன்று , பதினேழு வீரர்களுடன் சென்று கொண்டிருந்தபோது , கானி டாப் என்ற பகுதியில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த இருநூறு அடி பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது . இந்த விபத்தில் பத்து வீரர்கள் உயிரிழந்தனர் . மற்றவர்கள் காயமடைந்தனர்

விபத்து நடந்தது குறித்து தகவல் கிடைத்தவுடன் ராணுவம் , காஷ்மீர் போலீசார் , உள்ளூர் பொதுமக்கள் இணைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். காயமடைந்த வீரர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் . பலத்த காயமடைந்தவர்கள் மேல் சிகிச்சைக்காக உதம்பூர் ராணுவ மருத்துவமனைக்கு ஹெலிகாப்டர் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்

**வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்**
**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்**
**மதுரை 625020**
**கோப்பு எண்: e -3304830/2025/F**

பா.சுரேஷ்,
S/O.பால்சாமி
எண் : 67/2.மகாத்மா காந்தி தெரு வடகரை பெரியகுளம்
தேனி மாவட்டம்.
பின்கோடு 625531

மனுதாரர்

எதிர்

உயர்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்
மதுரை.

எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாத்தா இ.மூக்கன் த/பெ.இடும்பன், என்பவர் கடந்த 01.09.1977ம், ஆண்டு தேதியில் மதுரை வடக்கு தாலுகா, சமயநல்லூர்(வழி), சிறுவாலை(அஞ்சல்) அம்பலத்தாடி 625402. கிராமத்தில் இறந்ததற்கான இறப்புச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்து உள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள நாளிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி மதுரை வருவாய் கோட்டாட்சியர் அலுவகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். இவை தவறும் பட்சத்தில் மனுதாரர் கோரியபடி உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மனுதாரர்**
**பா.சுரேஷ்**

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000